தின கனி
செய்திகள் மற்றும்விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com


RNI-TNTAM/2023/88253

நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்






| Vol: 02 | Issue: 156 | 4 Pages | 3.1.2025 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 156 | 4 பக்கங்கள் | 3.1.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கங் கடை

**விளக்கம்:**
கொலையால் நன்மையாக விளையும் ஆக்கம் பெரிதாக இருந்தாலும், சான்றோர்க்குக் கொலையால் வரும் ஆக்கம் மிக இழிவானதாகும்.

## மாண்டிநீக்ரோ நாட்டில் 12 பேரை சுட்டுக்கொன்ற நபர் தற்கொலை



போட்கோரிகா, ஜன.3

தென்கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான மாண்டிநீக்ரோவில் உள்ள செடிஞ்ஜே என்ற நகரத்தில், மதுபான விடுதி ஒன்றில் நேற்று மாலை சுமார் 5.30 மணியளவில் 45 வயதான அகோ மார்டினோவிக் என்ற நபர் சரமாரியாக துப்பாக்கி சூடு நடத்தினார்.


இந்த துப்பாக்கி சூட்டில் மதுபான விடுதியின் உரிமையாளர் உள்பட 4 பேர் உயிரிழந்தனர். தொடர்ந்து அகோ மார்டினோவிக், மேலும் 3 இடங்களுக்குசென்றுகண்மூடித்தனமாகதுப்பாக்கிசூடுநடத்தியுள்ளார். இந்த தாக்குதல்களில் மொத்தம் 12 பேர் உயிரிழந்தனர்.

துப்பாக்கிசூடுநடத்திவிட்டுதப்பிச்சென்றஅகோமார்டினோவிக்கின் இருப்பிடத்தை கண்டறிந்து போலீசார் அவரை சுற்றி வளைத்தனர். அப்போது அகோ மார்டினோவிக், தனது தலையில் துப்பாக்கியால் சுட்டுதற்கொலைசெய்துகொண்டார்எனபோலீசார்தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கி சூடு நடத்திய நபர் மீது ஏற்கனவே சட்டவிரோதமாக ஆயுதம் வைத்திருந்தது உள்ளிட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன. மொத்தம் 6 லட்சத்து 20 ஆயிரம் மக்கள் தொகையை கொண்ட சிறிய நாடான மாண்டிநீக்ரோவில், துப்பாக்கி கலாசாரம் அதிகமாக பரவியிருக்கிறது.

கடந்த 2022ம் ஆண்டு இதே செடிஞ்ஜே நகரத்தில் 2 குழந்தைகள் உள்பட 10 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். துப்பாக்கி சூடு நடத்திய நபரை போலீசார் சுட்டுக்கொன்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வங்காளதேசத்தில் இந்து மத தலைவர் சின்மய் கிருஷ்ண தாசுக்கு மீண்டும் ஜாமீன் மறுப்பு



டாக்கா, ஜன.3

வங்காளதேசத்தில் முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசாங்கம் பதவிக்கு வந்த பிறகு, சிறுபான்மை இந்துக்கள் மற்றும் அவர்களின் வழிபாட்டுத் தலங்கள் மீது தொடர்ச்சியான தாக்குதல்கள் நடக்கின்றன. இது இந்துக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. கடந்த நவம்பர் 25ம் தேதி இந்து அமைப்பின் தலைவரும், இஸ்கான் முன்னாள் துறவியுமான சின்மய் கிருஷ்ண தாஸ் தேசத்துரோக வழக்கில் கைது செய்யப்பட்டார்.

மறுநாள் அவர் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவருக்கு ஜாமீன்மறுக்கப்பட்டது.இதனால்சிறைக்குகொண்டுசெல்லப்பட்டார். அவருக்கு ஜாமீன் மறுக்கப்பட்டதால் இந்துக்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பு ஏற்பட்டது. கோர்ட்டுக்கு வெளியே போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது ஏற்பட்ட மோதலில் வழக்கறிஞர் ஒருவர் கொல்லப்பட்டார்.

இந்நிலையில், சின்மய் கிருஷ்ண தாசின் ஜாமீன் மனு மீதான விசாரணை சட்டோகிராம் பெருநகர அமர்வு நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது தேசத்துரோக வழக்கு என்பதால் ஜாமீன்வழங்கஅரசுதரப்பு வழக்கறிஞர் எதிர்ப்பு தெரிவித்தார். அவரது வாதத்தை ஏற்ற நீதிபதி சைபுல் இஸ்லாம், குற்றம்சாட்டப்பட்ட சாமியார் சின்மய் கிருஷ்ண தாசின் ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். இதையடுத்து, ஜாமீன் கோரி ஐகோர்ட்டில் மேல்முறையீடுசெய்யஉள்ளதாகசின்மய்கிருஷ்ணதாசின்வழக்கறிஞர் தெரிவித்தார்.

## அமெரிக்காவில் நைட் கிளப்பில் துப்பாக்கி சூடு 10 பேர் காயம்




நியூயார்க், ஜன.3

அமெரிக்காவில் துப்பாக்கி கலாசாரம் நாளுக்குநாள்அதிகரித்து வருகிறது. கல்வி நிறுவனங்கள், வணிக வளாகங்கள், கிளப்புகள் போன்ற பொது இடங்களில் நடைபெறும் துப்பாக்கி சூடு சம்பவங்கள் பொதுமக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளன.

இந்நிலையில், நியூயார்க் நகரில் உள்ள ஒரு பிரபல நைட் கிளப்பில் (இரவு விடுதி) நேற்று இரவு துப்பாக்கி சூடு நடந்தது. கிளப்பிற்கு வெளியே நின்றிருந்தவர்கள் மீது மர்ம நபர் ஒருவர் சரமாரியாக சுட்டதில் 10 பேர் காயமடைந்ததாக தகவல் வெளியாகி உள்ளது.

காயமடைந்தவர்கள்அனைவரும்அருகில்உள்ளமருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்களின் உயிருக்கு ஆபத்து இல்லை என்று காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "பெண் அதிகாரத்தை நோக்கி தமிழ்நாடு" முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்



சென்னை, ஜன.3

சென்னை சைதாப்பேட்டையில் மகளிர் திறன் மேம்பாடு மையத்தை முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார். இந்த மையத்தின் மூலம் 18 வயது முதல் 40 வயதுடைய பெண்கள் வேலைவாய்ப்பு, சுய தொழில் செய்வதற்கு இந்த மையம் உதவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில் பேசிய முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின், "புத்தாண்டு பிறந்து நான் கலந்து கொள்ளும் முதல் நிகழ்ச்சி இது. அண்ணா, கருணாநிதி வழியில், ஈ.வே.ராவின் கனவை நினைவாக்கும் விதமான திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. அரசுப் பணிகளில் மகளிருக்கு இடஒதுக்கீடு, மகளிர் சுய உதவிக்குழுக்கள், சொத்தில் பெண்களுக்கு சமஉரிமை உள்ளிட்ட திட்டங்களை உதாரணமாக சொல்லலாம். பெண்கள் கல்வி அறிவை பெற வேண்டும் என்பதன் அடுத்த கட்டமாக, பெண்கள் உயர்கல்வி உறுதி செய்யும் விதமான திட்டங்களை உறுதி செய்து வருகிறோம்.

விடியல் பயணத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தோழி விடுதி உள்ளிட்ட திட்டங்கள் உள்ளன. பெண்கள், அதிகாரம், உலக அறிவை பெற வேண்டும் என்பதற்காகத் தான் இதுபோன்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம். பெண்கள் உயர்ந்தால் தான் ஒரு சமூகமே உயர்ந்து நிற்கும். பெண் அடிமை என்ற நிலையில் இருந்து பெண் அதிகாரம் என்னும் மாற்றத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம். கொளத்தூரில் அனிதா அச்சீவர்ஸ் அகாடமி எனும் பெயரில் திட்டத்தை தொடங்கி, பெண்களுக்கு திறன் மேம்பாட்டு வளர்ச்சி பணிகளை கொடுத்து வருகிறோம் பெரியார் என்ன கனவு கண்டிருந்தாரோ, எதற்காக வாழ்நாள் முழுவதும் போராடினாரோ, அந்த எண்ணங்களை எல்லாம் நிறைவேற்றும் வகையில் பல திட்டங்களை தீட்டி வருகிறோம்" என்று அவர் கூறினார்.



2025 ஆம் ஆண்டு ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு T.புதுப்பாளையத்தை சேர்ந்த மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர் முருகன் நடராஜன் அவர்களின் சார்பாக கள்ளக்குறிச்சி மாவட்ட கழக செயலாளர் திரு. இரா.குமரகுரு Ex.MLA அவர்களை சந்தித்து வாழ்த்துக் கூறி கேக் வெட்டி ஆசி பெற்ற தருணம்.

## திருவள்ளூர் மாவட்டம் பாரதிய ஜனதா கட்சியின் பள்ளிப்பட்டு வடக்கு மண்டல தலைவராக ஏ.கிரண்குமார் தேர்வு: ஏராளமான பாஜகவினர் மற்றும் நிர்வாகிகள் வாழ்த்து



பள்ளிப்பட்டு, ஜன.3

திருவள்ளூர் மாவட்டம் பாரதிய ஜனதா கட்சியின் பள்ளிப்பட்டு வடக்கு மண்டல தலைவராக ஏ. கிரண்குமார் தேர்வு செய்யப்பட்டார். அவருக்கு ஏராளமான பாஜகவினர்மற்றும்நிர்வாகிகள்வாழ்த்து தெரிவித்தனர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பாரதிய ஜனதா கட்சியின் பள்ளிப்பட்டு வடக்கு மண்டல தலைவராக ஏ.கிரண்குமார் தேர்வு செய்யப்பட்டார். இத்தேர்தல் விழாவில், தேர்தல் அதிகாரி, மாவட்ட பொதுச் செயலாளர் ஆர்யா சீனிவாசன், ஆர்.எஸ்.எஸ். சங்கசாலக் திருத்தணி நகர் ஒன்றியத் தலைவர் டாக்டர் ஸ்ரீகிரண், மாவட்ட இளைஞர் அணித் தலைவர் டி.டி.எஸ்.டெல்லி பாபு, பொதுச் செயலர் முனியப்பன், துணைத் தலைவர் முனிசாமி, மாணிக்யம், இளைஞர் அணித் தலைவர் ஏ.வேலு, மாவட்ட வழக்கறிஞர் பிரிவுச் செயலர் ஹரி பிரசாத், தகவல் தொழில்நுட்பப் பிரிவுத் தலைவர் ரோஹித், ஹேமந்த். , நிர்வாகிகள் வெங்கடசுப்ரமணி, கோவிந்தசாமி, சீனிவாசன், பெருமாள் மற்றும் பாஜக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

## ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு மாணவர்களுக்கு எழுது பொருட்கள் வழங்கல்





திருப்பூர், ஜன.3

திருப்பூர் மாவட்டம்சு ண்டக்காம்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு 250 மாணவ மாணவிகளுக்கு ஊடக கனி நல சங்கம் சார்பாக எழுதுப் பொருட்கள் (Notebook) வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பள்ளி தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்கள் முன்னிலையில், சங்க உறுப்பினர்கள் மாணவர்களுக்கு பொருட்களை வழங்கினர். மாணவர்கள் மகிழ்ச்சியுடன் இந்த உதவியை பெற்றுக் கொண்டனர்

## பொது அறிவிப்பு

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வட்டம், திருப்பூர் –641607, மண்ணரை, பி.வி.நகர், கதவு எண்.3/598ஏ என்ற விலாசத்தில் வசிக்கும் வரும் சுப்புராஜ் அவர்களின் மனைவி சுகந்தி (ஆதார் எண்.9070 5700 9742) என்பவர் தந்த தகவலின் அடிப்படையில் நான் கொடுக்கும் பொது அறிவிப்பு என்னவென்றால்,

எனது கட்சிக்காரர் இதனடியிற்கண்ட சொத்தை கடந்த 09.12.2020தேதியன்றுதொட்டிபாளையம்சார்பதிவாளர்அலுவலகத்தில் பத்திர எண். 4803/ 2020 டி கிரையம் பெற்றுள்ளார்.

எமது கட்சிக்காரரின் கணவர் சுப்புராஜ் என்பவர் கடந்த 16.12.2024ம் தேதி அன்று காலை 11.00 மணியளவில் கீழ்க்கண்ட இடத்தினை இன்ஜினியரிடம் காண்பிப்பதற்காக எனது கட்சிக்காரரின் வீட்டில் இருந்து முதலிபாளையம் சென்று கொண்டிருக்கும் போது, திருப்பூர் மாவட்டம், கூலிபாளையம் நால்ரோட்டில் உள்ள டீக்கடையில் தேநீர் அருந்திவிட்டு பார்க்கும் போது, எனது இருசக்கர வாகனத்தில் வைத்திருந்த அசல் ஆவண எண்.4803/2020 தொலைந்துவிட்டது.

ஆவணம்

ஷை ஆவணத்தினை எங்கு தேடியும் கிடைக்கவில்லை.

எனவே, எனது கட்சிக்காரரின் அசல் ஆவணம் எண்.4803/2020 எவரேனும் எடுத்திருந்தால் அதனை எந்த வில்லங்கத்திற்கும் உட்படுத்தக்கூடாது என்றும், அப்படி ஏதேனும் வில்லங்க விவகாரத்திற்கு உட்படுத்தும் பட்சத்தில் அது எனது கட்சிக்காரரை கட்டுப்படுத்தாது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், எனது கட்சிக்காரரின் அசல் பத்திர ஆவணம் எண். 4803/2020 தினை கொண்டு வந்து வழக்கறிஞராகிய என்னிடம் ஒப்படைக்கும் பட்சத்தில் அவர்களுக்கு தக்க சன்மானம் அளிக்கப்படும் என்பதையும் இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

சொத்து விபரம்

திருப்பூர் ரிடி, தொட்டிபாளையம் சப்டி, திருப்பூர் வட்டம், முதலிபாளையம் கிராமம், க.ச.410/2பி நெ. பு.ஏ.2.01 க்கு தரம் ரூ.1.13 செண்ட் போக மீதமுள்ள பு.ஏ.1.88 செண்ட் பூமியில் வடபுறமாக உள்ள பு.ஏ.1.40 பூமியும், க.ச.410/2சி நெ. காலை பு.ஏ.0.08க்கு தரம் ரூ.0.04 பூராவும், பின்னும் க.ச.405/1.சி நெ. காலைபு.ஏ.7.41க்குதரம்ரூ.4.15இதில்வடபுரத்தில்மேல்புறமாக உள்ள பு.ஏ.09 செண்ட் பூமியும், க.ச.410/2ஏ நெ. பு.ஏ.1.87க்கு தரம் ரூ.1.05 இதில் வடபுறமாக உள்ள பு.ஏ.0.90. க.ச.410/2ஏ நெ. காலை பு.ஏ.1.87க்கு ரூ.1.05 இதில் பு.ஏ.1.60 ½ விஸ்தீரணமுள்ள பூமியில் தென்புறமாக உள்ள பு.ஏ.0.70% செண்ட், பின்னும் க.ச.410/2ஏ நெ. காலை பு.ஏ.1.87 மற்றும் க.ச.410/2பி நெ. பு.ஏ.2.01 பூமியில் பு.ஏ.0.65 ½ ஆக மொத்தம் பு.ஏ.3.89 பூமியை லேஅவுட் செய்து சைட்டகளாகப் பிரித்து ஸ்ரீ பண்ணாரி அம்மன் நகல் என பெயரிடப்பட்டுள்ளதில் மேற்படி லேஅவுட் பிளானில் சைட் நெ.32ல் வடபுரம் பாதி சொத்து பூராவும் சகிதம்.

மேற்படி சொத்து க.ச.410/2பி நெ. காலைக்கு கட்டுப்பட்டது.

G.SENTHIL SIVAKUMAR, B.Com., B.L.,
Advocate
109 Best Complex, Kumaran Road,
Tiruppur-641 601. Mobile No.99655 23567.

# திருமணங்களை, புதுமண தம்பதிகளே ஆன்லைனில் பதிவு செய்யலாம்: தமிழக அரசு திட்டம்

சென்னை, ஜன.3

தமிழகத்தில், பத்திரப்பதிவு அலுவலகங்களில் திருமணங்களை பதிவு செய்யும் நடைமுறை உள்ளது. அதற்காக தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம் 2009ம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. இந்த சட்டத்தின் கீழ் தமிழகத்தில் நடைபெறும் திருமணங்களை பதிவு செய்து கொள்ளலாம். இந்த சட்டம் கொண்டுவரப்பட்ட போது, திருமணம் நடைபெறும் பகுதியில் உள்ள பதிவாளர் அலுவலகத்தில் மட்டுமே திருமணத்தை பதிவு செய்ய முடியும்.

பின்னர் 2020ம் ஆண்டு இந்த சட்டத்தில் தமிழக அரசு திருத்தம் ஒன்று கொண்டு வந்தது.

அதன்படி மணமகன் அல்லது மணமகள் வசிக்கும் பகுதியில் உள்ள பதிவாளர் அலுவலகத்தில் கூட திருமணங்களை பதிவு செய்யலாம்.

இந்த திருத்தம் வந்தபிறகு கூட தமிழகத்தில் சொற்ப அளவிலான திருமணங்கள் மட்டுமே பதிவு செய்யப்படுகிறது. வீடுகள், திருமண மண்டபங்கள் மற்றும் கோவில்களில் நடக்கும் திருமணங்களை பத்திரப்பதிவு அலுவலகங்களில் அதற்கான ஆவணங்களை கொடுத்து பதிவு செய்யலாம். ஆனால் பாஸ்போர்ட் பெறும் தம்பதிகள் மற்றும் காதல் திருமணங்கள் செய்பவர்கள் மட்டுமே பத்திரப்பதிவு அலுவலகங்களில் பதிவு செய்து வருகின்றனர்.

மற்றவர்கள் பதிவு செய்வதில்லை.

இது குறித்து தமிழக அரசு ஆய்வு செய்ததில் பத்திரப்பதிவு அலுவலகங்களில் சான்றிதழ் பெறுவதில் பொதுமக்கள் பல்வேறு இன்னல்களை சந்திப்பது தெரியவந்தது. குறிப்பாக அரசு திருமண பதிவுக்கு கட்டணமாக ரூ.100ம் மற்றும் கம்ப்யூட்டர் கட்டணமாக ரூ.100ம் என மொத்தமே ரூ.200 தான் செலுத்த வேண்டும்.

ஆனால் பொதுமக்களிடம் இருந்து ரூ.10 ஆயிரம் வரை லஞ்சமாக வசூலிப்பதாக தெரியவந்துள்ளது. எனவே இந்த பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் தமிழக அரசு பொதுமக்களே நேரடியாக ஆன்லைனில் திருமண பதிவுகளை பதிவு செய்யும் நடைமுறையை கொண்டு வர உள்ளது. அதன்படி தம்பதிகள் பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு நேரடியாக வரத்தேவையில்லை. அவர்கள் பத்திர எழுத்தர்கள் மூலமாக அல்லாமல் தாங்களே நேரடியாக வீட்டில் இருந்து பதிவு செய்யலாம். கட்டணத்தையும் அதில் செலுத்தி விடலாம்.

திருமணத்திற்கான ஆவணங்கள் சரியாக இருக்கும் பட்சத்தில் உடனடி சான்றிதழ் வழங்கப்படும். இந்த திட்டம் முதலில் தமிழ்நாடு திருமண சட்டத்தின் கீழ் பதிவு செய்பவர்களுக்கு பொருந்தும்.

பத்திரப்பதிவு அலுவலகங்களில் பதிவு செய்யப்படும் சிறப்பு திருமணங்கள் போன்றவற்றில் ஏற்கனவே உள்ள நடைமுறைகள் இருக்கும்.

இந்த ஆன்லைன் திருமணப்பதிவு மூலம் தமிழக அரசு, பொதுமக்களுக்கு பல்வேறு பலன்கள் கிடைக்கும் என்று எண்ணுகிறது. அதாவது இந்த பதிவுகள் மூலம் மோசடி திருமணங்கள் முற்றிலும் தடுக்கப்படும். சுப்ரீம் கோர்ட்டு விதிமுறைப்படியும் முறையாக திருமணங்கள் பதிவு செய்யப்படும் என்று நினைக்கிறது.

தற்போது பத்திரப் பதிவுத்துறையில் ஸ்டார்2 மென்பொருள் மூலம் பதிவு நடக்கிறது. எனவே அதன் மேம்படுத்தப்பட்ட ஸ்டார்3 நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. அதற்கான பணிகள் தொடங்கி உள்ளன. இந்த மென்பொருளில் தான் திருமண பதிவுகளை பொதுமக்களே மேற்கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விரைவில் இவை செயல்பாட்டிற்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# வரத்து குறைந்ததால் சின்ன வெங்காயம் விலை திடீர் உயர்வு



போரூர், ஜன.3

கோயம்பேடு, மார்க்கெட்டில் வரத்து குறைவால் சின்ன வெங்காயம் விலை கடும் உயர்ந்து உள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு வரை மொத்த விற்பனையில் சின்ன வெங்காயம் ஒரு கிலோ ரூ.70க்கு மட்டுமே விற்கப்பட்டது.

இந்த நிலையில் வரத்து குறைவால் சின்ன வெங்காயம் விலை திடீரென அதிகரித்து உள்ளது. மொத்த விற்பனையில் ஒரு கிலோ ரூ.110க்கும் வெளி மார்க்கெட்டில் உள்ள காய்கறி கடைகளில் சின்ன வெங்காயம் கிலோ ரூ.150 வரையிலும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதேபோல் பரவலாக பெய்து வரும் மழையால் வரத்து குறைந்து உள்ளதால் பீன்ஸ், அவரைக்காய் உள்ளிட்ட காய்கறிகளின் விலையும் கடந்த வாரத்தை காட்டிலும் மொத்த விற்பனையில் கிலோவுக்கு ரூ.10 முதல் ரூ.20 வரை அதிகரித்து உள்ளது. தொடர்ந்து உச்சத்தில் இருந்து வரும் முருங்கைக்காய் ஒரு கிலோ ரூ.150க்கு விற்கப்படுகிறது. வெளி மார்க்கெட்டில் உள்ள காய்கறி கடைகளில் முருங்கைக்காய் ஒரு கிலோ ரூ.200க்கும், பீன்ஸ் மற்றும் அவரைக்காய் கிலோ ரூ.80க்கும், ஊட்டி கேரட் மற்றும் பீட்ரூட் கிலோ ரூ.70க்கும், உஜாலா கத்தரிக்காய் கிலோ ரூ.60க்கும், வெண்டைக்காய் கிலோ ரூ.50க்கும் விற்கப்படுகிறது. தக்காளி விலை குறைந்து ஒரு கிலோ ரூ.20 முதல் ரூ.25க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

# புத்தாண்டு கொண்டாட்டத்தில் விபத்தில் சிக்கி 4 பேர் சாவு

சென்னை, ஜன.3

சென்னையில் நேற்று இரவு புத்தாண்டு கொண்டாட்டத்தின்போது கல்லூரி மாணவர் உள்பட 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

மதுபோதையில் வாகனம் ஓட்டுவதை தவிர்க்க வேண்டும் என்று போலீசார் கேட்டுக்கொண்டிருந்த போதிலும் அதனை காதில் வாங்கி கொள்ளாமல் 4 வாலிபர்களும் மது போதையில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றதே விபத்துக்கு காரணமாக அமைந்துள்ளது.

சென்னை சேத்துப்பட்டு கெங்கு ரெட்டி சுரங்கப்பாதை வழியாக மதுபோதையில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற வடமாநிலத்தை சேர்ந்த தீபக் என்ற வாலிபர் சுவற்றில் மோதி விழுந்து பலியானார். பின்னால் அமர்ந்திருந்த பாபு என்பவர் காயத்துடன் உயிர் தப்பினார்.

சென்னை, வடபழனியை சேர்ந்தவர் சாருகேஷ் (வயது19). கல்லூரி மாணவர். இவர் நேற்று இரவு கிழக்கு கடற்கரை சாலையில் நண்பர்களுடன் புத்தாண்டு கொண்டாட்டத்தில் ஈடுபட்டார். பின்னர் அதிகாலை அங்கிருந்து வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் புறப்பட்டு வந்து கொண்டு இருந்தார்.

நீலாங்கரை அடுத்த வெட்டுவாங்கேனி அருகே வந்தபோது கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் திடீரென கண்டெய்னர் லாரி மீது மோதியது. இதில் சம்பவ இடத்திலேயே சாருகேஷ் பலியானார். அதிவேகமாக மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்ததே விபத்துக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

பெரும்பாக்கம், நூக்கம்பாளையம், பெரியபாளையத்தம்மன் கோவில் தெருவை சேர்ந்தவர் ஜெகதீஷ். இவரது மகன் நித்திஷ் (18). இவர் புத்தாண்டை முன்னிட்டு மோட்டார் சைக்கிளில் நண்பர்களுடன் வெளியில் சென்று இருந்தார்.

நள்ளிரவு 12 மணியளவில் நித்திஷ் தனது மோட்டார் சைக்கிளில் அதே பகுதியில் உள்ள சிவன் கோவில் அருகே வந்து கொண்டு இருந்தார். இதில் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் சாலையோரம் இருந்த பள்ளத்தில் பாய்ந்தது. இதில் பலத்த காயம் அடைந்த நித்திஷை அக்கம்பக்கத்தினர் மீட்டு அருகில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி நித்திஷ் பரிதாபமாக இறந்தார்.

கேளம்பாக்கம் அருகே நாவலூர் சிப்காட் பழைய மாமல்லபுரம் சாலையில் நேற்று இரவு வாலிபர் ஒரு மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்தார். வி.டி.என் டவர்ஸ் அருகே வந்த போது கட்டுபாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் தாறுமாறாக ஓடி சாலையோரம் பாய்ந்து சரிந்தது. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த வாலிபர் பலியானார். அவர் யார்? என்ற விபரம் உடனடியாக தெரியவில்லை. மோட்டார் சைக்கிள் பதிவு எண்ணை வைத்து கேளம்பாக்கம் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# நான் உயிரோடு இருக்கும்வரை அண்ணாமலையின் சவால் பலிக்காது: வைகோ

சென்னை, ஜன.3

சென்னையில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது:

தி.மு.க. கூட்டணி வலுவாக இருக்கிறது. 200 தொகுதிகளில் தி.மு.க. கூட்டணி உறுதியாக வெற்றி பெறும்.

பா.ஜ.க.வால் தமிழகத்தில் ஒருபோதும் காலூன்ற முடியாது. நான் இருக்கும் வரை தி.மு.க. ஆட்சியை அகற்ற விடமாட்டேன்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திட்டமிட்டு பணியாற்றுகிறார். அனைத்துத்தரப்பினரும் பயன்பெறும் வகையில் சிறப்பான ஆட்சியை நடத்தி வருகிறார்.

பெண்கள், விவசாயிகள், மாணவர்கள் என அனைவருக்குமான திட்டங்களை முதலமைச்சர் நிறைவேற்றி வருகிறார்.

ஒரே நாடு ஒரே தேர்தல் முறையை கொண்டு வர பார்க்கிறார்கள். மோடியின் மனதில் அதிபர் ஆகவேண்டும் என்ற எண்ணம் புதைந்து கிடைக்கிறது.



ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டம் இந்தியாவில் சாத்தியமற்றது.

நான் உயிரோடு இருக்கும்வரை அண்ணாமலையின் சவால் பலிக்காது. அண்ணாமலையின் சாட்டையடி போராட்டம் ரசிக்கும் படியாக இருந்தது. அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றவாளிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும்.

தி.மு.க. கூட்டணியில் எந்த விரிசலும் இல்லை. விஜய்யின் அரசியல் வருகையால் தி.மு.க. கூட்டணியில் எந்த பாதிப்பும் ஏற்படாது என தெரிவித்தார்.

# 2025ம் ஆண்டு அ.தி.மு.க.வுக்கு எழுச்சியான ஆண்டாக இருக்கும்: செல்லூர் ராஜு

மதுரை, ஜன.3

2025 புத்தாண்டை முன்னிட்டு மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ தனது குடும்பத்துடன் சாமி தரிசனம் செய்தார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறுகையில், 2025 ஆம் ஆண்டு அ.திமு.க.விற்கு எழுச்சியான ஆண்டாக இருக்கும். இந்த ஆண்டில் விடியா அரசிடமிருந்து தமிழக மக்களுக்கு விடியல் கிடைக்கும். தமிழக மக்களுக்கு விடியல் கிடைப்பதற்கான பயணத்தை அ.தி.மு.க. முன்னெடுத்துச் செல்லும்.

அண்ணா பல்கலைக்கழக மாணவிக்கு ஏற்பட்ட வன்கொடுமை இனி தமிழகத்தில் எந்த பெண்ணுக்கும் நடக்கக்கூடாது. தமிழகம் அமைதி பூங்காவாக திகழ அ.தி.மு.க. ஆட்சி அமைய வேண்டும். சட்டமன்றத் தேர்தல் கூட்டணி அமைவதையும், ஒருங்கிணைந்த அ.தி.மு.க. தேர்தல் களத்தை சந்திப்பதையும் எடப்பாடி பழனிசாமி முடிவெடுப்பார். தமிழக மக்களுக்காக அரசியல் செய்யக்கூடிய கட்சியாக அ.தி.மு.க. திகழ்ந்து வருகிறது என 63 சதவீத மக்கள் வாக்களித்து உள்ளனர். 2025 ஆண்டு அ.தி.மு.க.விற்கு எழுச்சி தருகிற ஆண்டாகவும் மகிழ்ச்சி தருகிற ஆண்டாகவும் திகழும். தி.மு.க. அரசு உண்மையாகவே மக்களுக்கு பொங்கல் பரிசு வழங்க வேண்டும் என்றால் ஒரு குடும்பத்திற்கு ரூ.30 ஆயிரம் பொங்கல் பரிசு வழங்க வேண்டும். அ.தி.மு.க. ஆட்சியில் 5,000 ரூபாய் வழங்க வேண்டும் என மு.க.ஸ்டாலின் கோரிக்கை விடுத்தார். ஜல்லிக்கட்டில் மாடுபிடி வீரர்களுக்கு உரிய இழப்பீடும், காப்பீடும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறினார்.



# வேலூரில் திருவள்ளுவர் சிலை முன்பு விவசாயி அரை நிர்வாண போராட்டம்

வேலூர், ஜன.3

வேலூர் மாவட்டம், கணியம்பாடி அடுத்த பாப்பான் தோப்பு கிராமத்தை சேர்ந்தவர் ஜெய் சாமி. இவர் கணியம்பாடி ஒன்றிய விவசாய சங்க தலைவராக இருந்து வருகிறார்.

இன்று காலை பழைய பஸ் நிலையம் வந்த ஜெய் சாமி அங்குள்ள திருவள்ளுவர் சிலையின் முன்பு அரை நிர்வாண நிலையில் அமர்ந்து நெற்பயிரை வைத்து திடீரென போராட்டத்தில் ஈடுபட்டார்.

இது குறித்து தகவல் அறிந்த வேலூர் வடக்கு போலீசார் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயியிடம் சமாதான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். அப்போது அவர் காட்டுப்புத்தூர் அடுத்த பாப்பான் தோப்பு கிராமத்தில் உள்ள ஏரி வண்டல் மண்ணை அங்குள்ள ரியல் எஸ்டேட் அதிபர்கள் கடத்திச் சென்று கிணறு போல் வெட்டி அதில் பதுக்கி வைத்துள்ளனர்.



ஏரி வண்டல் மண்ணை விவசாயம் மற்றும் பானை செய்வதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். ரியல் எஸ்டேட் அதிபர்கள் வண்டல் மண்ணை பதுக்கி வைப்பதால் விவசாயத்திற்கு வண்டல் மண் கிடைக்காமல் அவதி அடைந்து வருகிறோம்.

இது குறித்து கலெக்டர் அலுவலகம் மற்றும் கணியம்பாடி வட்டார வளர்ச்சி அலுவலகம் உள்ளிட்ட இடங்களில் பலமுறை மனு கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என தெரிவித்தார்.

போலீசாரின் சமாதானத்தை ஏற்காமல் ஜெய்சாமி தொடர்ந்து அரை நிர்வாண போராட்டத்தில் ஈடுபட்டார்.

இதனால் பழைய பஸ் நிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

# ஆண்டின் முதல் நாளிலேயே முடங்கிய ரெயில்வே முன்பதிவு இணையதளம்

## ஊருக்கு சென்றவர்கள் முன்பதிவு செய்ய முடியாமல் தவிப்பு

சென்னை, ஜன.3

நாடு முழுவதும் ரெயில் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்ய ஐ.ஆர்.சி.டி.சி.யின் இணையதளம் மற்றும் மொபைல்போன் செயலியை மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த ஐ.ஆர்.சி.டி.சி. இணையதளம் சர்வர் கடந்த டிசம்பர் மாதம் மட்டும் 3 முறை முடங்கியது.

இந்த நிலையில் ஆண்டின் தொடக்க நாளான புத்தாண்டில் இன்றும் இந்த இணையதளம் முடங்கிவிட்டது. இதனால் முன்பதிவு செய்யகாத்திருந்த ரெயில் பயணிகள் கடும் அவதிப்பட்டனர்.

அதிலும் விடுமுறையில் சொந்த ஊர்களுக்கு சென்றிருந்த பயணிகள் 'தக்கல்' டிக்கெட் எடுக்க முடியாமல் தவித்தனர்.




முன்பதிவு செய்வதற்கு இசேவை மையங்களுக்கு சென்றவர்கள் பல மணி நேரம் காத்திருந்து கடும் சிரமத்துக்கு ஆளானார்கள். டிசம்பரில் இருந்து இதுவரை 4 முறை ரெயில்வே இணையதள சர்வர் முடங்கியதால் பொதுமக்கள் ரெயில்வே துறைக்கு புகார் தெரிவித்து வருகின்றனர்.

# விட்டுக்கொடுக்க மறுக்கும் ராமதாஸ்... 9 மாவட்ட செயலாளர்களுடன் அன்புமணி திடீர் ஆலோசனை

சென்னை, ஜன.3

வட மாவட்டங்களில் பா.ம.க.வுக்கு தனி செல்வாக்கு உள்ளது. இந்த செல்வாக்கை மனதில் வைத்துதான் தேர்தல் நேரங்களில் கூட்டணி அமைப்பதற்கும் கட்சிகள் ஆர்வம் காட்டுகின்றன.

அதிலும் குறிப்பாக வட மாவட்டங்களில் கூட்டணிகளின் வெற்றி, தோல்விக்கு காரணமாக இருப்பது பா.ம.க.தான். அந்த கட்சிக்கான வாக்கு வங்கியும் அப்படியே உள்ளது.

சமீபத்தில் புதுச்சேரியில் நடந்த பொதுக்குழு கூட்டத்தில் டாக்டர் ராமதாசுக்கும், அன்புமணிக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு கட்சியினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தினாலும் கட்சி தொண்டர்கள் ராமதாஸ் மற்றும் அன்புமணி ஆகியோரிடம் தான் கட்டுக்கோப்பாக இருக்கிறார்கள். அவர்களை பொறுத்தவரை இருவரையும் எதிர்பார்க்கிறார்கள்.



மாநில தலைவராக இருந்து கட்சியை வழிநடத்தும் அன்புமணி கட்சிக்கு இளரத்தம் என்ற ரீதியில் கட்சியை தன் கட்டுப்பாட்டில் வைத்து நடத்த வேண்டும் என்று விரும்புகிறார். இதற்காக அவர் நேற்று 9 மாவட்ட செயலாளர்களுடன் ஆலோசனை நடத்தினார். தந்தை ராமதாசுக்கு வயதாகி விட்டதால் அவர் ஓய்வு எடுக்க வேண்டும். வேண்டுமானால் கட்சிக்கு ஆலோசனை வழங்கட்டும். நிர்வாகிகள் நியமனங்களில் தலையிடக்கூடாது என்று எதிர்பார்க்கிறார். ஆனால் அதற்கு ராமதாஸ் உடன்படவில்லை. தான் தொடங்கிய கட்சி. தான் விரும்பும் வரை தன் விருப்பப்படிதான் எல்லாம் நடக்க வேண்டும் என்று நினைக்கிறார்.

இருவரும் தங்கள் நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதால் கவுரவம் பட பாணியில் வீட்டுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் எதிர்த்து வருகிறார்கள். வன்னியர்கள் முன்னேற்றத்துக்காக குரல் கொடுத்தும் போராடியும் வருவது பா.ம.க. எனவே வன்னியர்களை பொறுத்தவரை இவர் மீதும் தீவிர பற்றோடு இருக்கிறார்கள்.

ஜி.கே.மணி, ஏ.கே. மூர்த்தி, வக்கீல் பானு, பு.த.அருள்மொழி போன்ற மூத்த நிர்வாகிகள் பலரும் இந்த பிரச்சனைக்கு மனம் ஒத்து இருவரும் முடிவெடுக்க வேண்டும் என்று இருவரையும் சந்தித்து தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தி வருகிறார்கள்.

தொண்டர்களை பொறுத்தவரை விரைவில் நல்ல சேதி வரும் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கிறார்கள்.

# பன்னீர் கரும்பு கொள்முதல் செய்ய அதிகாரி ராதாகிருஷ்ணன் நேரடி ஆய்வு

சென்னை, ஜன.3

உழவர் திருநாள் பொங்கல் பண்டிகையையொட்டி பொதுமக்களுக்கு பொங்கல் தொகுப்புடன் 1 முழுக் கரும்பு வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

இதையொட்டி பன்னீர் கரும்புகளை அரசே நேரடியாக கொள்முதல் செய்து ரேஷன் கடைகளுக்கு அனுப்ப உள்ளது. இதற்காக அரியலூர், கடலூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி, மதுரை, மயிலாடுதுறை, நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, சேலம், சிவகங்கை, தஞ்சை, தேனி,



திருவாரூர், திருச்சி, திருநெல்வேலி, விழுப்புரம், விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 3 கோடியே 19 லட்சத்து 41 ஆயிரம் கரும்புகள் பயிரிடப்பட்டு அறுவடைக்கு தயாராக உள்ளது. ரேஷன் கடைகளுக்கு 2 1/4 கோடி கரும்பு தேவைப்படும் பட்சத்தில் கூடுதலாகவே கரும்புகள் வயலில் உள்ளது.

இவற்றை கொள்முதல் செய்ய கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதா கிருஷ்ணன் விழுப்புரம் மாவட்டம் சென்று அங்கு பயிரிடப்பட்டுள்ள பன்னீர் வகை கரும்புகளை பார்வையிட்டார். கரும்பு தரம் பற்றியும் ஆய்வு மேற்கொண்டார். உள்ளூர் விவசாயிகளுடன் கருத்துக்கள் பரிமாறி அவர்களின் பயனுள்ள உரையாடல்களில் ஈடுபட்டார்.

இந்த ஆய்வில் கூட்டுறவு இணை பதிவாளர் விஜய சக்தி, ஜே.ஆர்.ஸ்வர்ணா லட்சுமி, நந்தகுமார் (செங்கல்பட்டு), மண்டல மேலாளர் சந்திரசேகர், மனோ உடன் இருந்தனர்.

# பரதம் ஆடியபடியே பரத முத்திரை, சுலோகங்கள் கூறி தஞ்சை சிறுமி சாதனை



தஞ்சாவூர், ஜன.3

தஞ்சை மாவட்டம் மருங்குளம் கிராமத்தை சேர்ந்த விமல்ராஜ்விஜயலட்சுமி தம்பதியின் மகள் விதுலா ஸ்ரீ (வயது 2).

இந்த நிலையில் சிறுமி விதுலா ஸ்ரீ சென்னையில் உள்ள தன் பாட்டி வீட்டில் தங்கி இருந்தார். அப்போது அவரை அவரது பாட்டி அருகில் உள்ள கோவிலுக்கு அழைத்து சென்றார். அங்கு மாணவிகளுக்கு பரத கலை ஆசிரியை ஒருவர் பரதம் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

இதை பார்த்த சிறுமி விதுலா ஸ்ரீ தானாகவே பரதம் ஆட தொடங்கி உள்ளார். சிறுமியிடம் இருந்த திறமையை அந்தப் பரத நாட்டிய ஆசிரியை மட்டுமல்லாமல் கோவிலில் கூடி இருந்த அனைவரும் வியந்து பாராட்டினர். இந்த சிறிய வயதில் இவ்வளவு பெரிய திறமையா என மனதார பாராட்டினர்.

இதையடுத்து விதுலா ஸ்ரீக்கு திருப்புகழ் பாடலுக்கு பரதம் ஆட அந்த ஆசிரியை கற்றுக் கொடுத்தார்.

பரத முத்திரைகள், சுலோகங்கள் உள்ளிட்ட பல்வேறு விஷயங்களை கற்றுகொடுத்தார்.இதனை கற்பூரம் போல் உடனே பற்றிக் கொண்ட சிறுமி விதுலா ஸ்ரீ திருப்புகழ் பாடலுக்கு பரதம் ஆடி கற்றுக் தேர்ந்தார்.

இதனை தொடர்ந்து சாதனை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் சிறுமி விதுலாஸ்ரீ பங்கேற்று திருப்புகழ் பாடலுக்கு பரதம் ஆடியபடியே பரதமுத்திரைமற்றும்சுலோகங்கள் கூறி சாதனை படைத்தார்.

சிறுமியின் திறமை டிவைன் புக் ஆப் ரெக்கார்ட்ஸ் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்தது. சாதனை படைத்த சிறுமியை அனைவரும் பாராட்டி வருகின்றனர்.

# தேவதானப்பட்டி அருகே பைக் மீது சரக்கு வாகனம் மோதி விபத்து தந்தை, மகன் பலி



திண்டுக்கல், ஜன.3

தேனி மாவட்டம் தேவதானப்பட்டி அருகே ஜி. கல்லுப்பட்டியை சேர்ந்தவர் ராஜேந்திரன் (வயது55). தனது மகன் வீரமுத்து (30)வுடன் பைக்கில் பெரியகுளத்தில் இருந்து வந்து கொண்டிருந்தார்.

இன்று அதிகாலை தேனி திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் டி.வாடிப்பட்டி பிரிவு பகுதியில் வந்தபோது தேனியை நோக்கி வந்த சரக்கு வாகனம் பைக் மீது பயங்கரமாக மோதியது.

இதில் தூக்கி வீசப்பட்ட ராஜேந்திரன் மற்றும் அவரது மகன் வீரமுத்து ஆகியோர் படுகாயம் அடைந்து சம்பவ இடத்திலேயே துடிதுடித்து பலியாகினர். இதை பார்த்ததும் சரக்கு வாகன டிரைவர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார். இதுகுறித்து தகவல் அறிந்ததும் தேவதானப்பட்டி போலீசார் விரைந்து வந்து இருவரின் உடலையும் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக பெரியகுளம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் வழக்குப்பதிவு செய்து விபத்தை ஏற்படுத்திய சரக்கு வாகன டிரைவரை தேடி வருகின்றனர். புத்தாண்டு தினமான இன்று விபத்தில் தந்தை மகன் பலியான சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# தாளவாடி அருகே காட்டு யானைகள் அட்டகாசம்: நஷ்ட ஈடு வழங்க விவசாயிகள் வலியுறுத்தல்



தாளவாடி, ஜன.3

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் மொத்தம் 10 வனச்சரகங்கள் உள்ளன. இந்த வனச்சரகத்தில் ஏராளமான வனவிலங்குகள் வசித்து வருகின்றன. உணவு தண்ணீர் தேடி யானைகள் அடிக்கடி விவசாய தோட்டத்தில் புகுந்து பயிர்களைநாசம் செய்வது தொடர் கதையாகி வருகிறது.

இந்நிலையில் தாளவாடி அருகே ஜீரகள்ளி வனச்சரகத்துக்கு உட்பட்ட குருபரகுண்டி கிராமத்தை சேர்ந்தவர் மாதேகவுடா (வயது 49) என்பவர் 2 ஏக்கரில் ராகி பயிர் செய்துள்ளார். நேற்று இரவு தோட்டத்தில் புகுந்த 4க்கும் மேற்பட்ட யானைகள் ராகி பயிரை சேதாரம் செய்துள்ளது.

காலையில் மாதேகவுடா தோட்டத்திற்கு சென்று பார்த்தபோது ராகி பயிர் சேதாரம் ஆனாதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். யானையால் ஒரு ஏக்கர்ராகி பயிர்சேதாரம் ஆகியுள்ளது. சேதம் அடைந்த ராகி பயிர்களுக்கு வனத்துறையினர் உரிய நஷ்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், யானைகள்தோட்டத்தில் புகாதவாரு நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

யானைகள் தொடர்ந்து ராகி தோட்டத்தில் புகுந்து பயிர்களை நாசம் செய்து வருவதால் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் பல லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து வனத்துறையினர் கூறும்போது, கர்நாடக மாநிலத்திலிருந்து யானை கூட்டங்கள் இடம் பெயர்ந்து தாளவாடி மற்றும் வனப்பகுதியில் முகாமிட்டு சுற்றி வருகின்றன.

எனவேதாளவாடி வனப்பகுதி செல்லும் கிராம மக்கள் கவனத்துடன் செல்ல வேண்டும். குறிப்பாக இருசக்கர வாகனங்களில் செல்லும் வாகன ஓட்டிகள் எக்காரணம் கொண்டும் வனப்பகுதியில் வாகனங்களை நிறுத்த வேண்டாம் என வலியுறுத்தி உள்ளனர்.

# மெயினருவியில் குளிக்க அனுமதி: குற்றால அருவிகளில் குவிந்த சுற்றுலா பயணிகள்



தென்காசி, ஜன.3

தென்காசி மாவட்டம் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில்கடந்த 2 நாட்களாக பரவலாக மிதமான மழை பெய்தது.

இதனால் மேற்கு தொடர்ச்சி வனப்பகுதியையொட்டி அமைந்துள்ள குற்றால அருவிகளான மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றால அருவிக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது.

மெயின் அருவியில் நேற்று காலை முதல் தொடர்ந்து பெய்த சாரல் மழையினால் பாதுகாப்பு வளைவைத் தாண்டி தண்ணீர் விழும் சூழ்நிலை ஏற்பட்டது.

இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு உடனடியாக தடை விதிக்கப்பட்டு அங்கு பாதுகாப்பு பணியில் போலீசார் ஈடுபட்டனர்.

காலை முதல் இரவு வரை சுற்றுலா பயணிகளுக்கு மெயின் அருவியில் குளிக்க அனுமதி மறுக்கப்பட்டதால் குற்றாலம் வந்திருந்த சுற்றுலாபயணிகள் மற்றும் ஐயப்ப பக்தர்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

2025 புத்தாண்டு பிறந்ததையொட்டி அதிகாலை முதலே குற்றால அருவிகளில் குளிப்பதற்கு பொதுமக்கள் படையெடுத்த வண்ணம் இருந்தனர்.

மெயின் அருவியில் குளிப்பதற்கு அனுமதி வழங்குவதற்கு தாமதம் ஏற்பட்டதால் குற்றாலம் வந்திருந்த ஐயப்ப பக்தர்கள்குற்றாலநாதர்கோவில் அருகே அமைக்கப்பட்டுள்ள குடிநீர் குழாயில் குளிக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. அதில் ஐயப்ப பக்தர்கள் குளித்து குற்றாலநாதர் கோவிலில் வழிபட்டு சென்றனர்.

சிறிது நேரத்தில் மெயின் அருவியில் தண்ணீர் வரத்து சீரானது என அறிவித்து மாவட்ட நிர்வாகம் சார்பில் அனைவருக்கும் குளிக்க அனுமதி வழங்கப்பட்டதால் நீண்ட வரிசையில் நின்று ஐயப்ப பக்தர்களும்சுற்றுலாபயணிகளும் மெயின் அருவி, பழைய குற்றாலம் மற்றும் ஐந்தருவியில் குளித்து மகிழ்ந்தனர்.

குற்றாலத்தில் கட்டுக்கடங்காத அளவில் கூட்டம் உள்ளதால் அங்கு பாதுகாப்பு பணியில் அதிக அளவில் போலீசார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் புத்தாண்டு பிறப்பையொட்டி குற்றாலநாதர் கோவில் மற்றும் தென்காசி காசி விஸ்வநாதர் கோவில், தேவாலயங்கள் என பல்வேறு வழிபாட்டுத் தலங்களிலும் காலை முதலே பொதுமக்களின் கூட்டம் அதிகரித்து காணப்படுகிறது.

# திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா புகைப்பட கண்காட்சியை சுற்றுலா பயணிகள் பார்வையிட அனுமதி

கன்னியாகுமரி, ஜன.3

கன்னியாகுமரியில் நடந்த திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவையொட்டி விழா நடந்த மைதானத்தில் திருவள்ளுவர் சிலை உருவான வரலாறு மற்றும் திருக்குறள் பற்றிய கண்காட்சி அமைக்கப்பட்டு இருந்தது. இந்த கண்காட்சியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து பார்வையிட்டார்.

கண்காட்சியில் திருவள்ளுவர் சிலையின் மர சிற்பத்திலான மாதிரி தோற்றம், திருக்குறள் ஓலைச்சுவடிகள், திருக்குறள் எழுதப்பட்ட பட்டு சேலை, புத்தகங்கள், மின்நூல்கள், திருவள்ளுவர் சிலை உருவான வரலாறு பற்றிய புகைப்படங்கள், திருவள்ளுவர் பற்றிய குறிப்புகள், கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலையின் அரிய புகைப்படங்கள் இடம் பெற்றுள்ளன. இந்த திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழா கண்காட்சியை ஏராளமான சுற்றுலா பயணிகள் பார்வையிட்டு வருகின்றனர். இதைத் தொடர்ந்து திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழாவையொட்டி அமைக்கப்பட்டுள்ள இந்த கண்காட்சியை ஒரு வார காலம் இலவசமாக பார்வையிடலாம் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. இதைத் தொடர்ந்து இன்றும் ஏராளமான சுற்றுலா பயணிகள் திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழா கண்காட்சியை பார்வையிட்டு சென்றனர்.

# மதுரை மீனாட்சி அம்மன் கோவில் முன்பு திருமணம் செய்து கொண்ட காதல் ஜோடி



மதுரை, ஜன.3

நாடு முழுவதும் ஆங்கில புத்தாண்டு உற்சாகமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த நிலையில் உலகப் பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் மதுரை ஜெய்ஹிந்த்புரம் பகுதியைச் சேர்ந்த காதலர்களான காமாட்சி மற்றும்தர்னிகாபுத்தாண்டு தினத்தில் மீனாட்சியம்மன் கோவில் முன்பாக திருமணம் செய்து கொண்டனர்.

4 ஆண்டுகளாக இருவரும் காதலித்துவந்த நிலையில் குடும்பத்தினர் சம்மதத்துடன் இன்று காதல் திருமணம் செய்து கொண்டனர். அப்போது காதலிக்கு காதலன் மாங்கல்யம் கயிறை கட்டியபோது கூடியிருந்த நண்பர்கள், குடும்பத்தினர், குழந்தைகள் மற்றும் கோவிலுக்கு வந்த பக்தர்கள் என ஏராளமானோர் மணமக்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்கள், திருமண வாழ்த்துக்கள் என்ற முழக்கத்தோடு அட்சதை தூவி வாழ்த்தி ஆசிர்வதித்தனர்.

உலகமெங்கும் புத்தாண்டு மகிழ்ச்சியோடு கொண்டாடப்படக்கூடிய நாளில் எங்களுடைய காதல்திருமணம்நடந்துள்ளது மகிழ்ச்சி அளிப்பதாகவும், இன்றைய நாள் போலவே என்றும் எங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கும் எனவும், மீனாட்சி அம்மனின் தரிசனத்தோடு எங்களுக்கு காதல் திருமணம் புத்தாண்டு நாளில் நடந்தது மகிழ்ச்சி அளிக்கிறது எனவும், குடும்பத்தினர் ஆசிர்வாதத்தோடு மீனாட்சி அம்மனின் ஆசிர்வாதத்தோடும் எங்கள் திருமணம் நடந்துள்ளது எனவும் புதுமண தம்பதியினர் தெரிவித்தனர்.

# திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் பக்தர்கள் குவிந்தனர்



திருச்செந்தூர், ஜன.3

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் சிறந்த பரிகார தலமாகவும், ஆன்மீக சுற்றுலாதலமாகவும் விளங்கி வருகிறது.

இங்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து கடல் மற்றும் நாழி கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்து செல்கின்றனர்.

தற்போது ஐயப்ப பக்தர்கள்சீசன்என்பதால்கோவிலுக்கு தமிழகம், கேரளா, ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களை சேர்ந்த பக்தர்கள் ஏராளமானோர் வந்துசாமிதரிசனம்செய்து செல்கின்றனர்.

மேலும் தற்போது மார்கழி மாதம் என்பதால் நெல்லை, தென்காசி, விருதுநகர், ராமநாதபுரம் உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த பக்தர்கள்பாத யாத்திரையாக வருவது வழக்கம்.

இவர்களில் பெரும்பாலானோர்கள் ஒவ்வொரு ஆண்டும் தை முதல் நாள் பொங்கலுக்கு முன்பே முருகப்பெருமானை தரிசிக்க வேண்டும் என்பதற்காக காவடி எடுத்தும், நீண்ட அலகு குத்தியும் பாத யாத்திரையாக வந்து தரிசனம் செய்து செல்வது வழக்கம். சிலர் தைப்பூசம் வரை பாத யாத்திரையாக வந்து சாமி தரிசனம் செய்வது வழக்கம்.

இந்த நிலையில் இன்று ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு ஏராளமான பக்தர்கள் கோவிலில் திரண்டனர். அவர்கள் கடல் மற்றும் நாழி கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி நீண்ட வரிசையில் சுமார் 5 மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு கோவில் நடை இன்று அதிகாலை 1 மணிக்கு திறக்கப்பட்டது. 1.30 விஸ்வரூப தரிசனம், 2 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம் தொடர்ந்து மற்ற கால பூஜைகள் நடைபெற்றது.

# பழனி முருகன் கோவிலில் அதிகாலை முதல் பக்தர்கள் காத்திருந்து சுவாமி தரிசனம்



திண்டுக்கல், ஜன.3

புத்தாண்டு பிறப்பை முன்னிட்டு உலகம் முழுவதும் மக்கள் உற்சாகத்துடன் கொண்டாடி வருகின்றனர்.

தமிழகத்திலும் புத்தாண்டு பண்டிகையை முன்னிட்டு கோவில்களில் சிறப்பு வழிபாடுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டன. தமிழ் கடவுள் முருகப்பெருமானின் 3ம் படை வீடான பழனியில் இன்று அதிகாலை 3 மணி முதல் பக்தர்கள் மலைக் கோவிலுக்கு சுவாமி தரிசனம் செய்ய வந்தனர்.

பக்தர்கள் வருகை அதிகரிப்பின் காரணமாக கோவில் நிர்வாகம் சார்பில் படிப்பாதையில் மாற்றம் செய்யப்பட்டு இருந்தது.அதன்படிதிண்டுக்கல் சாலை, உடுமலை சாலையில் ஏராளமான பக்தர்கள் பாத யாத்திரையாகவும் பழனி கோவிலுக்கு வருகை தந்தனர்.

இதனால் பழனி படிப்பாதை வழியாக மலையேறும்பக்தர்கள்குடமுழுக்கு நினைவரங்கம் வழியாக அனுமதிக்கப்பட்டு வந்தனர். மலைக்கோவிலில் இருந்து இறங்கும் பக்தர்கள்படிப்பாதையில் ராணி மங்கம்மாள் மண்டபம் அருகே உள்ள வழியில் இறங்குமாறு அறிவிப்பு செய்யப்பட்டது.

பழனி மலைக்கோவிலில் செல்போனுக்கு தடை விதிக்கப்பட்டு அதனை பக்தர்கள் பாதுகாப்பு அறையில் வைத்துச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தடையை மீறி மலைக்கோவிலில் செல்போன் பயன்படுத்தினால் ரூ.500 அபராதம் விதிக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டது.

புத்தாண்டு பண்டிகையில் பழனி தண்டாயுதபாணி சுவாமியை தரிசனம் செய்ய பல்வேறு மாநிலங்களில் இருந்தும், வெளி நாடுகளில் இருந்தும் பக்தர்கள் குவிந்தனர். இது தவிர சபரிமலை ஐயப்ப பக்தர்கள், பாத யாத்திரை பக்தர்கள் திரண்டதால் கட்டுக்கடங்காத கூட்டம் நிலவியது.

மலைக்கோவிலில் சுமார் 3 மணி நேரம் வரை காத்திருந்து சுவாமி தரிசனம் செய்யும் நிலை ஏற்பட்டது. அடிவாரம் பகுதியில் பக்தர்கள் காவடி எடுத்தும், அலகு குத்தியும் வந்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.

இதேபோல்திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கோட்டை மாரியம்மன் கோவில், அபிராமி அம்மன் கோவில், மலையடிவாரம் சீனிவாசபெருமாள் கோவில், தாடிக்கொம்பு சவுந்தரராஜ பெருமாள் கோவில் உள்ளிட்ட அனைத்து கோவில்களிலும் புத்தாண்டு பண்டிகையை முன்னிட்டு அதிகாலை முதல் கடும் பனியையும் பொருட்படுத்தாது பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர்.

மலையடிவாரம் சீனிவாச பெருமாள் கோவிலில்ஒவ்வொருபுத்தாண்டு அன்றும் பெருமாளுக்கு திருமஞ்சனமும், சொர்ணா அபிஷேகமும் நடைபெறும். அதன்படி இன்று காலை 5.30 மணிக்கு பெருமாளுக்கு நாணயங்களால் அபிஷேகம் செய்யப்பட்டு பின்னர் அது பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்பட்டது. இதனை வாங்குவதற்காகவே அதிகாலை முதல் பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து அதனை பெற்றுச் சென்றனர்.

# பாலியல் வன்கொடுமை செய்து பெண் படுகொலை குற்றவாளிகளை கைது செய்யாத காவல்துறைக்கு: அன்புமணி ராமதாஸ் கண்டனம்



சென்னை, ஜன.3

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது: கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலத்தை அடுத்த திம்மவரத்தைச்சேர்ந்த நிர்மலா என்பவர் கடந்த 26 ந்தேதி இரவு 7 மணிக்கு அவரது வீட்டிற்கு அருகில் உள்ள பால் சங்கத்திற்கு பால் விற்பனை செய்வதற்காக சென்றவர் கொடியவர்கள் சிலரால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று தெரிய வந்துள்ளது.

இதுகுறித்து சின்னசேலம் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். ஆனால், நிர்மலா பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்ப ட்டு, படுகொலை செய்யப்பட்டு 7 நாட்களுக்கு மேலாகும் நிலையில், குற்ற வாளிகள் யார் என்பது இதுவரை அடையாளம் கூட காணப்படவில்லை.

தமிழகத்தில் இப்போது நிலவும் பெண்களுக்கு பாதுகாப்பற்றநிலை இனியும்தொடரக்கூடாது. திம்மவரத்தில் நிர்மலா பாலியல் வன்கொடுமை மற்றும் படுகொலைக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுத் தரவும், இனிவரும் காலங்களில் பெண்களின்பாதுகாப்பை உறுதி செய்யவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். படுகொலை செய்யப்பட்ட நிர்மலாவின் கணவர் சில ஆண்டுகளுக்கு முன் இறந்து விட்டதால், முறையே 4, 3 வயது கொண்ட குழந்தைகள் ஆதரவற்றவர்களாகியுள்ளனர். அவர்களில் கல்வி மற்றும் வாழ்வாதாரத்திற்கு தேவையான உதவிகளையும் தமிழக அரசு வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# வேப்பந்தட்டை அருகே மேல்மருவத்தூர் பக்தர்கள் சென்ற பஸ் விபத்து: ஒருவர் பலி, 10பேர் காயம்



வேப்பந்தட்டை, ஜன.3

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டையை அடுத்துள்ள நெய்குப்பை கிராமத்தை சேர்ந்த 50க்கும் மேற்பட்டவர்கள் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோவிலுக்கு மாலை அணிந்து நேற்று இரவு ஒரு சுற்றுலா பஸ்சில் கோவிலுக்கு புறப்பட்டனர். பஸ்சை சேலம் மாவட்டம் கெங்கவல்லியை சேர்ந்த தமிழ்ச்செல்வன் (வயது 42) என்பவர் ஓட்டி சென்றார்.

நெய்குப்பையில் இருந்து பக்தர்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட பஸ் அரை கிலோ மீட்டர் தூரம் சென்றபோது திடீரென்று கட்டுப்பாட்டை இழந்து சாலையின் அருகே இருந்த ஓட்டு வீட்டில் திடீரென புகுந்தது. இதில் வீட்டில் சுவர் இடிந்து விழுந்தது.

இந்த விபத்தில் வீட்டுக்குள் தூங்கிக் கொண்டிருந்த சன்னாசி மனைவி லட்சுமி (40) என்பவர் இடிபாடுகளுக்குள் சிக்கி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். அருகில் தூங்கிக் கொண்டிருந்த கணவர் சன்னாசி, மகன் முத்து, மகள் தேன்மொழி ஆகியோர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

சுற்றுலா பஸ் வீட்டின் சுவரில் மோதுவதற்கு முன்பாக அருகில் நின்று கொண்டிருந்த மினி பஸ் மீது மோதி விட்டு பின்னர் வீட்டுக்குள் புகுந்தது. அப்போது பஸ்ஸில் பயணம் செய்த மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பக்தர்கள் 10க்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர்.

அவர்களை அருகில் இருந்தவர்கள் மீட்டு சிகிச்சைக்காக நெய்குப்பை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சேர்த்தனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த தகவல் அறிந்து வி.களத்தூர் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து லட்சுமியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். புத்தாண்டு தினத்தில் கோவிலுக்கு சென்ற பஸ் விபத்தில் சிக்கி பெண் ஒருவர் உயிரிழந்த சம்பவம் அந்தபகுதியில் பெரும்சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# கடந்த ஆண்டில் மட்டும் சென்னை மெட்ரோ ரெயிலில் 10.52 கோடி பேர் பயணம்

சென்னை, ஜன.3

கடந்த ஆண்டில் மட்டும் சென்னை மெட்ரோ ரெயிலில் 10.52 கோடி பயணிகள் பயணம் செய்துள்ளனர் என்று சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், மெட்ரோ ரெயில் சேவை தொடங்கியதிலிருந்து பொதுமக்களுக்கும், அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் பணியாற்றுபவர்களுக்கும் நம்பகமான பாதுகாப்பான போக்குவரத்து வசதியை தொடர்ந்து செய்து வருகிறது.

சென்னை மெட்ரோ ரெயிலில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 3.20 லட்சம் பேர் பயணிக்கின்றனர். சென்னை மெட்ரோ ரெயில் சேவை தொடங்கப்பட்ட ஒன்பது ஆண்டுகளில் இதுவரை இல்லாத அளவிற்கு 2024ம் ஆண்டில் மட்டும் 10.52 கோடி பேர் மெட்ரோ ரெயிலில் பயணித்துள்ளார்கள். 2023ம் ஆண்டை விட 2024ம் ஆண்டில் 1.41 கோடி பேர் அதிகமாக பயணித்துள்ளார்கள்.

2015 முதல் 2018 வரை 2,80,52,357 கோடி பயணிகள்சென்னைமெட்ரோ ரெயில்களில் பயணம் செய்துள்ளனர். அதே போல், 2019ம் ஆண்டில் 3,28,13,628 கோடி பயணிகளும், 2020–ம்ஆண்டில் 1,18,56,982 கோடி பயணிகளும், 2021ம் ஆண்டில் 2,53,03,383 கோடி பயணிகளும், 2022ம் ஆண்டில் 6,09,87,765 கோடி பயணிகளும், 2023ம் ஆண்டில் 9,11,02,957 கோடி பயணிகளும், கடந்த 2024ம் ஆண்டில் 10,52,43,721 கோடி பயணிகளும் சென்னை மெட்ரோ ரெயில்களில் பயணித்துள்ளார்கள்.

ஜூன் 29, 2015 முதல் டிசம்பர் 31, 2024 வரை மொத்தம் 35,53,60,793 பயணிகள் சென்னை மெட்ரோவில் பயணம் செய்துள்ளனர்.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் மெட்ரோ ரெயில்களில் பயணிப்பவர்களுக்கு கியூஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டு, பயண அட்டைகள் (Travel Card), வாட்ஸ்அப் டிக்கெட், Paytm App, PhonePe மற்றும் சிங்கார சென்னை அட்டை போன்ற அனைத்து வகையான பயணச்சீட்டுகளுக்கும் 20% கட்டணத் தள்ளுபடி வழங்குகிறது.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் வாட்ஸ்அப் டிக்கெட் (+91 83000 86000) மூலமாக மற்றும் Paytm App மூலமாகவும் பயணிகள் தங்கள் பயணச்சீட்டுகளைபெற்று கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எம்.ஜி.ஆர். தோற்றம் போன்று விஜய் படம் தேனியில் ஒட்டப்பட்ட சுவரொட்டியால் பரபரப்பு




தேனி, ஜன.3

உலகம் முழுவதும் ஆங்கில புத்தாண்டு நேற்று பிறந்தது. தமிழகத்தில் ஆட்டம், பாட்டத்துடனும், பட்டாசுகள் வெடித்தும் புத்தாண்டை வரவேற்றனர். மேலும் ஒருவருக்கொருவர் வாழ்த்துகளை பரிமாறிக்கொண்டனர். இதேபோல் பல்வேறு அரசியல் கட்சியினர் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பொதுமக்களுக்கு வாழ்த்து தெரிவிக்கும் வகையில் சுவரொட்டிகள் ஒட்டினர்.

அதன்படி, தேனி மாவட்டம் பெரியகுளத்திலும் பல்வேறு தரப்பினர் சார்பில் புத்தாண்டு வாழ்த்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. அதில், நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் ஒட்டியிருந்த சுவரொட்டிகள் பரபரப்பை ஏற்படுத்தியது. பெரியகுளம் நகர தமிழக வெற்றிக் கழகம் சார்பில் நேற்று நகரின் முக்கிய இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

இந்த சுவரொட்டியில், எம்.ஜி.ஆர். முக தோற்றம் போன்று விஜய் படத்தை வடிவமைத்து குறிப்பிட்டிருந்தனர். மேலும் அந்த சுவரொட்டியில், "2026ல் தமிழகத்தை காக்க புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவதாரம் எடுக்கும் தளபதியே...' அனைவருக்கும் ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துகள் என்ற வாசகங்கள் இடம்பெற்றிருந்தன.

# மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கை அரசியலாக்குவது ஏன்..? ஐகோர்ட்டு கேள்வி

சென்னை, ஜன.3

சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் தமிழகத்தில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தி இருந்தது.

இந்த வழக்கில் ஞானசேகரன் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை (எப்.ஐ.ஆர்) வெளியானது மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

சென்னை ஐகோர்ட்டு இந்த வழக்கைத் தாமாக முன்வந்து விசாரித்த நிலையில், மூன்று ஐ.பி.எஸ்.அதிகாரிகள்கொண்ட சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரிக்க உத்தரவிட்டது. இந்த பாலியல் வன்கொடுமை சம்பவத்திற்கு எதிராக பல்வேறு அரசியல் கட்சிகளும் போராட்டங்கள் நடத்தி வருகின்றனர்.

அந்த வகையில், பா.ம.க. மகளிர் அணி சார்பில் சென்னையில் இன்று நடைபெற இருந்த போராட்டத்துக்கு காவல் துறை அனுமதி வழங்கவில்லை.

இதனைத்தொடர்ந்து காவல்துறையின் எச்சரிக்கையை மீறி சென்னை வள்ளுவர் கோட்டத்தில் இன்று போராட்டம் நடத்த முயன்ற பசுமை தாயகம் தலைவர் சவுமியா அன்புமணி உள்ளிட்ட பா.ம.க.வினர் கைது செய்யப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து, பா.ம.க. போராட்டத்துக்கு அனுமதிக்க காவல் துறைக்கு உத்தரவிடக் கோரி சென்னை ஐகோர்ட்டில் பா.ம.க. வழக்கறிஞர் பாலு மனு அளித்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணையின்போது நீதிபதி பி.வேல்முருகன், "பெண்கள் பாதுகாப்பில் உண்மையான கவனம் செலுத்தாமல் அண்ணாபல்கலை. மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கை அரசியலாக்குவது ஏன் ?" என கேள்வி எழுப்பிய அவர், போராட்டம் நடத்தும் ஒவ்வொருவரும் தங்கள் மனதில் கை வைத்து பெண்களுக்கு பாதுகாப்பு தரப்படும் என்று கூறுங்கள்.

இப்படி ஒரு சம்பவம் நடந்ததற்கு அனைவரும் வெட்கப்பட வேண்டும். ஆனால் இந்த விவகாரத்தை அனைவரும் அரசியலாக்கி வருகிறார்கள். இந்த விவகாரத்தை கோர்ட்டு தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துள்ளது. காவல்துறை வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த விவகாரம் போராட்டம் நடத்துவதற்கான ஏற்புடையது அல்ல. வெறும் விளம்பரத்திற்காக இந்த போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளீர்கள்" என அவர் கூறினார்.

இதனைத்தொடர்ந்து அரசியல் விளம்பரத்துக்காக செய்யப்படும் போராட்டங்களுக்கு அனுமதி அளிக்க உத்தரவிட முடியாது என கூறி மனுவை தள்ளுபடி செய்து நீதிபதி பி.வேல்முருகன் உத்தரவிட்டார்.

## இறுதி கட்டத்தை எட்டிய ஹாலிவுட் நடிகை ஏஞ்சலினா ஜோலி விவாகரத்து வழக்கு



ஹாலிவுட் பிரபலங்களான நடிகை ஏஞ்சலினா ஜோலி மற்றும் நடிகர் பிராட் பிட் ஆகியோர் கடந்த எட்டு ஆண்டுகளுக்கு முன் கடந்த 2014ல் திருமணம் செய்து கொண்டனர். அவர்களுக்கு ஆறு குழந்தைகள் உள்ளனர். ஆனால் இருவருக்குள்ளும் நீண்டநாட்களாக கருத்து வேறுபாடு இருந்து வந்தது. கடந்த 2016ல் தம்பதிகள் விவாகரத்து கோரிய நிலையில், நீண்ட சமரச முயற்சிகளுக்கு பின்னர் இருவரும் சேர்ந்து வாழ்வதாக கூறப்பட்டது.

ஆனால்இருவருக்குள்ளும்மீண்டும்கருத்துவேறுபாடுஏற்பட்டுள்ளது. தற்போது தம்பதிகள் இருவரும் மீண்டும் விவாகரத்து கோரி நீதிமன்றத்தில் முறையிட்டுள்ளனர். இதுகுறித்து ஜோலியின் வழக்கறிஞர் ஜேம்ஸ் சைமன் அளித்த பேட்டியில், 'கடந்த எட்டு ஆண்டுகளுக்கு முன்பு, தனது கணவரிடம் இருந்து ஏஞ்சலினா விவாகரத்து கோரினார். குழந்தைகளை பராமரிப்பதில் இருவருக்குள்ளும் பிரச்னை இருந்து வருகிறது. நீதிமன்றத்தில் வழக்குகள் எதுவும் இன்னும் தாக்கல் செய்யவில்லை. நீதிபதியின் ஒப்புதல் பெறவேண்டியுள்ளது. இதுதொடர்பாக பிராட் பிட்டின் வழக்கறிஞருடன் பேசியுள்ளோம். குழந்தைகள் பராமரிப்பு மற்றும் சொத்துகள் பகிர்ந்து கொடுத்தல் தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடந்து வருகிறது' என்றார். எனவே விவாகரத்து வழங்கி நீதிமன்றம் விரைவில் தீர்ப்பளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மருத்துவமனையில் பெண்ணுடன் நடனமாடிய வினோத் காம்ப்ளி.. வீடியோ வைரல்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும், சச்சின் டெண்டுல்கரின் நெருங்கிய நண்பருமான வினோத் காம்ப்ளி, கடந்த சில தினங்களுக்கு முன் உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். 52 வயதான அவர் திடீர் உடல்நலக்குறைவு காரணமாக தானேயில் உள்ள தனியார் மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அவரது மூளையில் ரத்தம் உறைந்திருப்பதாகவும் சிறுநீர் தொற்று உள்ளதாகவும் கண்டறியபட்டது. இதனால் அவர் மருத்துவர்களின் தீவிர கண்காணிப்பில் இருப்பதாக கூறப்பட்டது. இதனிடையே அவர் சிகிச்சை பெற்று வரும் போட்டோ மற்றும் வீடியோ இணையத்தில் வெளியாகி ரசிகர்களை அதிர்ச்சிக்கு ள்ளாக்கியது. இந்த நிலையில் வினோத் காம்ப்ளி உடல்நலம் நல்ல முறையில் முன்னேறி வருவதாக கூறப்படுகிறது. மருத்துவமனையில் உள்ளவாறு பெண் ஒருவருடன் அவர் நடனமாடும் வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரல் ஆகி வருகிறது. வினோத் காம்ப்ளி விளையாடிய கால கட்டத்தில் சிறந்த வீரராக போற்றப்பட்டார். இந்திய அணிக்காக 17 டெஸ்ட் போட்டிகளிலும் 104 ஒருநாள் போட்டிகளிலும் விளையாடி இருக்கிறார். முதல் தர கிரிக்கெட்டில் பல்வேறு சாதனைகளை படைத்துள்ள வினோத் காம்ப்ளி, அதில் மட்டும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரன்களை குவித்துள்ளார். மேலும் 1983ம் ஆண்டு நடைபெற்ற ஒருநாள் உலகக்கோப்பையை வென்ற இந்திய அணியிலும் இடம்பெற்றிருந்தார். இருப்பினும் பல சர்ச்சைகளில் சிக்கினார். அதனால் அணியிலிருந்து நீக்கப்பட்டார். அதன்பின் அவருக்கு தனிப்பட்ட முறையில் பல்வேறு பின்னடைவுகள் ஏற்பட்டன. குடிப்பழக்கத்துக்கு அடிமையானார். அவரை, குடிப்பழக்கத்தில் இருந்து மீட்டு வர, கபில்தேவ், சச்சின் உள்ளிட்ட முன்னாள் வீரர்கள் பெரும் முயற்சி மேற்கொண்டனர். ஆனால், அதற்கு காம்ப்ளி ஒத்துழைப்பு தரவில்லை. இதனால், உடல்நல பாதிப்பில் இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆசிப் அலி நடித்துள்ள 'ரேகாசித்திரம்' படத்திற்கு 'யு/ஏ' சான்றிதழ்




'கிஷ்கிந்தா காண்டம்' திரைப்படத்தின் வெற்றிக்குப் பிறகு , நடிகர் ஆசிப் அலி மீண்டும் மற்றொரு திரில்லர் படத்தில் நடித்து முடித்துள்ளார். இந்த படத்திற்கு 'ரேகாசித்திரம்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த படத்தில் அனஸ்வர ராஜன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். நடிகர் ஆசிப் அலி 'கூமன் : தி நைட் ரைடர்' மற்றும் 'தளவன்' படங்களுக்கு பிறகு மிண்டும் போலீஸ் அதிகாரியாக இப்படத்தில் நடித்துள்ளார்.

இந்த படத்தில் இந்திரன்ஸ், நிஷாந்த் சாகர், ஜரின் ஷிஹாப், சித்திக் மற்றும் பலர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். மம்முட்டி நடித்த 'தி ப்ரீஸ்ட்' படத்தின் மூலம் பிரபலமான ஜோபின் டி சாக்கோ இந்தப் படத்தை இயக்கியுள்ளார். இப்படம் இன்வெஸ்டிகேஷன் திரில்லர் கதைக்களத்தில் உருவாகி உள்ளது.


சமீபத்தில் இந்த படத்தின் டீசர் மற்றும் டிரெய்லர் வெளியாகி வைரலாகின. அதனை தொடர்ந்து தற்போது இப்படத்திற்கு தணிக்கை குழு 'யு/ஏ' சான்றிதழ் வழங்கியுள்ளது. இப்படம் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 9ந் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

## பிக் பாஷ் லீக்: சிக்சருக்கு பறந்த பந்து... தாவி கேட்ச் பிடித்த மேக்ஸ்வெல்.. வீடியோ வைரல்



ஆஸ்திரேலியாவின் உள்ளூர் டி20 தொடரான பிக் பாஷ் லீக் தொடரின் 14வது சீசன் தற்போது நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற 19வது லீக் ஆட்டத்தில் முன்ரோ தலைமையிலான பிரிஸ்பேன் ஹீட் அணி, ஸ்டோய்னிஸ் தலைமையிலான மெல்போர்ன் ஸ்டார்சை எதிர் கொண்டது. இதில் முதலில் பேட்டிங் செய்த பிரிஸ்பேன் அணி 20 ஓவர்கள் முடிவில் 149 ரன்கள் அடித்தது. இதனையடுத்து இலக்கை நோக்கி களமிறங்கிய மெல்போர்ன் ஸ்டார்ஸ் 18.1 ஓவர்களில் 153 ரன்கள் அடித்து வெற்றி பெற்றது. முன்னதாக இந்த ஆட்டத்தில் பிரிஸ்பேன் அணி பேட்டிங் செய்தபோது 17வது ஓவரை டேனியல் லாரன்ஸ் வீசினார். அந்த ஓவரின் முதல் பந்தை எதிர்கொண்ட பிரெஸ்ட்விட்ஜ் அதனை அதிரடியாக அடித்தார். அனைவரும் அதனை சிக்சர் என்று நினைத்தனர். ஆனால் எல்லைக்கோட்டின் அருகே பீல்டிங் செய்த கிளென் மேக்ஸ்வெல் தாவிச்சென்று பந்தை சிக்சரில் இருந்து தடுத்து எல்லைக்கு உள்ளே தட்டிவிட்டு அபாரமாக கேட்ச் செய்தார். இதனை பார்த்த மைதானத்தில் இருந்த ரசிகர்கள் அனைவரும் ஆச்சரியத்தில் உறைந்தனர். மேலும் இந்த கேட்ச் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

## 'திரு.மாணிக்கம்' படத்தை பாராட்டிய இயக்குனர் அமீர்




இயக்குநர் நந்தா பெரியசாமி இயக்கத்தில் சமுத்திரக்கனி நடிப்பில் உருவாகி இருக்கும் படம் திரு மாணிக்கம். இந்த படத்தில் சமுத்திரக்கனி, அனன்யா, பாரதிராஜா, நாசர், தம்பிராமையா, ஸ்ரீமன், வடிவுக்கரசி, கருணாகரன், இளவரசு மற்றும் பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். திரைப்படம் கடந்த 27 ஆம் தேதி வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

சீதாராமம்படத்தின்இசையமைப்பாளர்விஷால்சந்திரசேகர் இந்த படத்திற்கு இசையமைத்துள்ளார். மைனா சுகுமார் ஒளிப்பதிவு செய்துள்ள இந்த படத்தை ஜிபி ரவிக்குமார், சிந்தா கோபாலகிருஷ்ண ரெட்டி, ராஜா செந்தில் இணைந்து தயாரித்துள்ளனர். ஒரு மனிதன் இன்றைய காலகட்டத்திலும் நேர்மையாக இருக்க முடியுமா? அதற்கான சாத்தியம் இருக்கின்றதா என்பதை பற்றி பேசும் படமாக உருவாகியுள்ளது.

இந்தநிலையில் திரைப்படத்தை பார்த்த இயக்குனர் அமீர் படத்தை பாராட்டி பதிவிட்டுள்ளார். அதில், "தூதர் முகமது நபீ அவர்கள் கூறினார்கள். ஒரு காலம் வரும், அப்போது சத்தியத்தை பேசுகிறவர்கள் உள்ளங்கையில் நெருப்புத் துண்டை வைத்திருப்பதற்கு சமம் என்று. அதேபோல் இன்றைய காலத்தில் எளிய மனிதர்கள் வறுமையிலும் நேர்மையாக வாழ்வதென்பது அரிதிலும் அரிதானதாகவே மாறி வருகிறது.

உண்மையில்எல்லாமனிதர்களும்நேர்மையும்உண்மையுமாகஅறத்தோடுவாழவேண்டியதுஅவசியமாகிறது என்பதை உணர்த்தும் படம் தான் திரு.மாணிக்கம். எழுத்தாளர், இயக்குநர் திரு.நந்தா பெரியசாமி அவர்களை உளமார வாழ்த்துகிறேன்". என்று பதிவிட்டுள்ளார்.

## பயிற்சியாளர் வீரர்கள் இடையேயான விவாதங்கள் அணிக்கு உள்ளேயே இருக்க வேண்டும் கம்பீர்

இந்தியா ஆஸ்திரேலியா இடையிலான பார்டர் கவாஸ்கர் கோப்பை தொடரின் 5வது மற்றும் கடைசி போட்டி சிட்னியில் நாளை தொடங்குகிறது. இதில் முடிவடைந்துள்ள 4 போட்டிகளின் முடிவில் ஆஸ்திரேலியா 21 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இதனால் தொடரின் முடிவை நிர்ணயிக்கும் இந்த கடைசி போட்டியின் மீது மிகுந்து எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. இதில் இந்திய அணி வெற்றி பெற்றால் தொடரை 22 என்ற கணக்கில் சமன் செய்து பார்டர் கவாஸ்கர் கோப்பையை தக்கவைத்துக்கொள்ளும். மேலும் டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கான வாய்ப்பிலும் நீடிக்கும். மறுபுறம் ஆஸ்திரேலியா வெற்றி பெற்றால் பல வருடங்களுக்கு பின் பார்டர் கவாஸ்கர் கோப்பையை மீண்டும் கைப்பற்றும். மேலும் டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கு 2வது முன்னேற அதிக வாய்ப்புள்ளது. இதனால் இந்த போட்டி ரசிகர்கள் மத்தியில் மிகுந்த ஆவலை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் இந்த போட்டிக்கு முன்னதாக செய்தியாளர் சந்திப்பு இன்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் கம்பீர் பேசுகையில், "பயிற்சியாளர் மற்றும் வீரர்களுக்கு இடையேயான விவாதங்கள் அணிக்கு உள்ளேயே இருக்க வேண்டும். அது பற்றி வெளியான செய்திகள் உண்மையல்ல. ஒரு அணியாக நீங்கள் முன்னேற விரும்புகிறீர்கள். எனவே அணிக்குள் சில உண்மையான விவாதங்கள் நடைபெறுவது முக்கியம். ஒவ்வொரு வீரர்களுக்கும் என்ன செய்ய வேண்டும் என்பது தெரியும். எந்த பகுதியில் வேலை செய்ய வேண்டும் என்பதும் தெரியும். எனவே அவர்களைப் பற்றி நான் பேச மாட்டேன். நாங்கள் அணியாக வெல்கிறோம் அணியாக தோற்கிறோம். நாட்டுக்காக விளையாடும்போது நீங்கள் உங்களுடைய அதிகபட்ச பங்களிப்பை கொடுக்க வேண்டும். அது நிகழாதபோது நடைபெறும் விவாதங்கள் பயிற்சியாளர் மற்றும் வீரர்களுக்கு இடையே மட்டும் இருக்க வேண்டும். துரதி ர்ஷ்டவசமாக நாம் வெற்றிகளை மட்டுமே பார்க்கிறோம். எனவே எங்களுடைய அணிக்குள் இருக்கும் விவாதங்கள் அணிக்கு உள்ளேயே இருக்க வேண்டும். அணியில் நேர்மையான மக்கள் இருக்கும் வரை இந்திய அணி பாதுகாப்பான கைகளில் இருக்கும். நல்ல செய ல்பாடுகளை வெளிப்படுத்துவது மட்டுமே உங்களை இந்திய அணியில் தொடர்ந்து வைத்திருக்கும்" என்று கூறினார். முன்னதாக 4வது போட்டி தோல்விக்குப்பின் இந்திய அணியின் வீரர்கள்மற்றும்தலைமைபயிற்சியாளர்இடையேவிவாதங்கள் நடைபெற்றதாக செய்திகள் வெளியாகின. அதற்கு விளக்கமளிக்கும் வகையில் கம்பீர் தற்போது பேசியுள்ளார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.